| R1710 |
|---|

| Sub. Code |
|---|
| 411101 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2024**

**First Semester**

தமிழ்

இக்கால இலக்கியம்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

சரியான விடையைச் தேர்ந்தெடுத்தெழுதுக.

1. 'குடும்ப விளக்கு' நூல் வெளிவந்த ஆண்டு? (CO1, K1)

(அ) 1932 (ஆ) 1942

(இ) 1940 (ஈ) 1944

2. பாஞ்சாலி சபதத்தின் மையப் பாத்திரமாகத் திகழ்பவன் யார்? (CO1, K3)

(அ) துரியோதனன் (ஆ) தருமன்

(இ) சகுனி (ஈ) வீமன்

3. "அணைகளை உடையுங்கள்

ஆறுகள் பாடட்டும்" என்ற கவிதை வரிகளைப் பாடிய கவிஞர் (CO2, K4)

(அ) அப்துல் ரகுமான் (ஆ) மீரா

(இ) வைரமுத்து (ஈ) சிற்பி

4. பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடுக்க (பசுவய்யா-நூல்கள்) (CO4, K2)

(அ) நடுநிசி நாய்கள் (ஆ) பிரசாதம்

(இ) பூக்காரி (ஈ) உன்கை நகம்

5. முதல் வரலாற்று நாவல் எது? (CO3, K4)

(அ) பார்த்திபன் கனவு

(ஆ) மோகனாங்கி

(இ) பொன்னியின் செல்வன்

(ஈ) வேள்பாரி

6. "ஓர் இரவு" நாடகத்தின் கதைப் பாத்திரங்கள் (CO3, K1)

(அ) ரத்தினம் (ஆ) சேகர்

(இ) அகிலா (ஈ) சுசீலா

7. பொருத்துக (CO4, K2)

| | | |
|---|---|---|
| (i) | யுகசந்தி | - 1) அய்யக்கன் |
| (ii) | தனிமை | - 2) கந்தர்வன் |
| (iii) | அழகின் பரிமாணங்கள் | - 3)ஜெயகாந்தன் |
| (iv) | சாசனம் | - 4) ராஜம் கிருஷ்ணன் |

(அ) 4, 3, 2, 1 (ஆ) 3, 4, 1, 2

(இ) 3, 1, 2, 4 (ஈ) 4, 1, 3, 2

8. அரசுக்கு வரி செலுத்தாத உழவர்களின் நிலையைக் கூறும் சிறுகதை நூல் எது? (CO2, K1)

(அ) நகரம் (ஆ) கதவு

(இ) சாசனம் (ஈ) அய்க்கண்

9. சிறுகதையின் மாப்பசான் என்றழைக்கப்படுபவர் (CO1, K2)

(அ) புதுமைப்பித்தன் (ஆ) ஜெயகாந்தன்

(இ) மௌனி (ஈ) ந.பிச்சமூர்த்து

10. வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஒரு குறுங்காவிய நாடகம் எது? (CO3, K2)

(அ) சேரமான் காதலி (ஆ) சாகுந்தலம்

(இ) மாங்கனி (ஈ) இராமநாடகம்

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11\. (அ) 'குடும்ப விளக்கு' நூல் கூறும் கருத்தினை விவரிக்க. (CO1, K1)

அல்லது

(ஆ) பாஞ்சாலி சபதத்தில் சூதாட்டச் சருக்கத்தினை எடுத்துரைக்க. (CO2, K2)

12\. (அ) 'பறத்தல் அதன் சுதந்திரம்' எனும் கவிதை புலப்படுத்தும் கவிஞனின் உணர்வுகளை விளக்குக. (CO2, K1)

அல்லது

(ஆ) அப்துல் ரகுமானின் 'சிறகுகள்' - கவிதையின் கவிநயத்தைக் கூறுக. (CO2, K3)

13\. (அ) கு. அழகிரிசாமியின் அன்பளிப்பு - சிறுகதை கூறும் கதைக் கருவினை பகிர்ந்துரைக்க. (CO3, K1)

அல்லது

(ஆ) கந்தகக் கிடங்கினிலே கதை கூறும் சமூகக் கருத்தினை எடுத்தியம்புக. (CO4, K2)

14\. (அ) நாவலின் தோற்றம் வளர்ச்சி குறித்தெழுதுக. (CO2, K2)

அல்லது

(ஆ) பனையடி நாவலின் கதைப் பாத்திரங்களை விவரி. (CO1, K3)

15\. (அ) மாமன்னன் இராசராசன் குறித்து ஆசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணியன் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க. (CO3, K4)

அல்லது

(ஆ) "ஓர் இரவு" நாடகத்தில் கருணாகரத் தேவர், ரத்னம் கதைப் பாத்திரங்களை ஆராய்க. (CO4, K2)

## பகுதி இ (5 × 8 = 40)

அனைத்து வினாக்களுக்கும் 1,000 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) முடியரசனின் காவியப் பாவையின் பாடுபொருளை விளக்குக. (CO1, K2)

அல்லது

(ஆ) பிரிதலும் பிரிதல் நிமித்தமும், ஒரு கிராமத்து நதி ஆகிய இரு கவிதைகள் கூறும் சிந்தனைகளை எடுத்துரைக்க. (CO2, K2)

17. (அ) சிறு கதையின் இலக்கணம் மற்றும் அதன் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரை எழுதுக. (CO2, K3)

அல்லது

(ஆ) சாப விமோசனம், நகரம், சாசனம் ஆகிய சிறுகதைகள் புலப்படுத்தும் மையக் கருத்தினை விரிவாக ஆராய்ந்தெழுதுக. (CO3, K3)

18. (அ) 'மாங்கனி' காவியத்தில் கூறம் உவமைகளையும், காவிய கருவிற்குச் சான்றாக கண்ணதாசன் கூறும் சான்றாதாரங்களைக் குறிப்பிடுக. (CO2, K4)

அல்லது

(ஆ) பனையடி நாவல் கூறும் சூழலியல் சிந்தனைகளையும் சமுதாயச் சிந்தனைகளையும் விவரித்து எழுதுக. (CO3, K2)

19. (அ) சிலப்பதிகாரக் காப்பியக் கதைக்கு 'மூன்று சிலம்புகள் தேவை' என்பதை வ.சுப. மாணிக்கம் கூறும் கருத்துகளைப் பற்றி கூறுக. (CO1, K2)

அல்லது

(ஆ) 20-ம் நூற்றாண்டு புதுக் கவிதைகளின் சமூகக் கருத்துகளை எடுத்துரைக்க. (CO2, K2)

20. (அ) புதினத்தின் கூறுகளையும் கதைப் பின்னல்களையும் ஆராய்ந்து எழுதுக. (CO4, K1)

அல்லது

(ஆ) இக்கால இலக்கிய வகைமைகளுள் உரைநடை நாடகம் குறித்தும் நாடக அமைப்புகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்க. (CO3, K3)

———————

| R1711 |
|---|

| Sub. Code |
|---|
| 411102 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2024**

**First Semester**

Tamil

தொல்காப்பியம் (எழுத்ததிகாரம்)

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours  Maximum : 75 Marks

**பகுதி அ**  ($10 \times 1 = 10$)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. மஃகான் புள்ளி முன் தோன்றும் எழுத்து (CO1, K3)

(அ) வ் (ஆ) வ

(இ) வா (ஈ) வே

2. எழுத்ததிகாரத்தில் இடம்பெற்றுள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை (CO1, K1)

(அ) 413 (ஆ) 412

(இ) 483 (ஈ) 683

3. (i) ககாரம் ஙகாரம் - 1) இதழியைந்து பிறப்பன

(ii) சகாரம் ஞகாரம் - 2) நுனிநா அண்ணம்

(iii) டகாரம் ணகாரம் - 3) இடைநா அண்ணம்

(iv) பகாரம் மகாரம் - 4) முதல்நா அண்ணம்

(CO2, K2)

(அ) 3421 (ஆ) 4321

(இ) 1432 (ஈ) 4312

4. பொருந்தாததைத் தேர்வு செய்க (CO2, K4)

(அ) விளங்கோடு (ஆ) மாஞ்சோலை

(இ) பூத்தோட்டம் (ஈ) விளம்பழம்

5. புளிமரக் கிளவி பெறும் சாரியை எது? (CO3, K3)

(அ) அன் (ஆ) இன்

(இ) அம் (ஈ) ஒன்

6. "மழை என் கிளவி வளியியல் நிலையும்" என்ற நூற்பா இடம்பெறும் இயல் எது? (CO3, K2)

(அ) புள்ளி மயங்கியல் (ஆ) உருபியல்

(இ) தொகை மரபு (ஈ) உயிர் மயங்கியல்

7. வரிசைப்படுத்துக : ஐகார ஈற்று மரப்பெயர்கள் (CO3, K4)

(அ) அரை ஆவிரை பனை

(ஆ) பனை ஆவிரை அரை

(இ) ஆவிரை அரை பனை

(ஈ) பனை அரை ஆவிரை

8. ழகார இறுதி ———— இயற்றே (CO4, K4)

(அ) மகார (ஆ) ணகார

(இ) ரகார (ஈ) வகார

9. பின்வருவனவற்றுள் நெடில்தொடர்க் குற்றியலுகரம் எது? (CO5, K6)

(அ) ஏவு (ஆ) நிறைவு

(இ) ஏழு (ஈ) ஏடு

10. அளவுப்பெயர்கள் பத்தொடு புணரும்போது பெறும் சாரியை (CO5, K1)

(அ) இன் (ஆ) அன்

(இ) இல் (ஈ) அம்

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் 500 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) தொல்காப்பியர் கூறும் சார்பெழுத்துகள் பற்றி விவரி. (CO1, K1)

அல்லது

(ஆ) "பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல" பொருள் தருக. (CO1, K5)

12. (அ) இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியின் சிறப்புகளை எடுத்துரைக்க. (CO2, K3)

அல்லது

(ஆ) உருபுப் புணர்ச்சியின் சிறப்புகளை எடுத்துரைக்க. (CO2, K3)

13. (அ) எழுத்துச் சாரியைக் குறித்து உயிர்மயங்கியல் கூறுவன. (CO3, K2)

அல்லது

(ஆ) இயல்பாகும் அகர ஈற்றுச் சொற்கள் யாவை? (CO3, K1)

14. (அ) 'நகர' ஈற்றுப் புணர்ச்சி மாற்றங்களை விவரிக்க. (CO4, K5)

அல்லது

(ஆ) 'ணகர' ஈற்றுச் சொற்கள் புணருமாற்றைத் தெளிவுபடுத்துக. (CO4, K5)

15. (அ) புணரியல் நிலையிடை உணரத் தோன்றாச் சொற்கள் யாவை? (CO5, K6)

அல்லது

(ஆ) அளவு மற்றும் நிறைப் பெயர்கள் புணரும் புணர்ச்சி விதிகளைக் கூறுக. (CO5, K2)

## பகுதி இ (5 × 8 = 40)

அனைத்து வினாக்களுக்கும் 1,000 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) மொழிக்கு முதலாகும், ஈறாகும் எழுத்துகளை விவரித்து எழுதுக. (CO1, K2)

அல்லது

(ஆ) தனிமெய்கள் குறித்த தொல்காப்பியரின் கருத்துகளை விளக்கமாகத் தருக. (CO1, K1)

17. (அ) எழுத்துகளின் பிறப்பு முறை பற்றி ஒரு கட்டுரை வரைக. (CO2, K2)

அல்லது

(ஆ) சாரியைகளையும் அவற்றின் திரிபுகளையும் கட்டுரைக்க. (CO2, K2)

18. (அ) அளவு, நிறை, எண்ணுப்பெயர் புணர்ச்சியைத் தொகுத்தெழுதுக. (CO3, K4)

அல்லது

(ஆ) அகர, ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை தொகுத்துரைக்க. (CO3, K4)

19. (அ) மகர ஈற்றுச் சொற்கள் புணருமாற்றை விரிவாக எழுதுக. (CO4, K3)

அல்லது

(ஆ) மரப்பெயர்ப் புணர்ச்சிகளைத் தொகுத்தெழுதுக. (CO4, K2)

20. (அ) எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரை. (CO5, K1)

அல்லது

(ஆ) குற்றுகர ஈற்றுச் சொற்களுக்கான பொதுப்புணர்ச்சி விதிகளை விவரிக்க. (CO5, K5)

———————

| R1712 |
|---|

| Sub. Code |
|---|
| 411103 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2024

**First Semester**

தமிழ்

அற இலக்கியம்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 1 = 10)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. திருக்குறளுக்கு முதல் முதலில் உரை எழுதியவர் யார்? (CO1, K1)

(அ) பரிமேலழகர் (ஆ) தருமர்

(இ) மணக்குடவர் (ஈ) பரிப்பெருமாள்

2. பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் அதிக அறங்களைச் சொல்லும் நூல் எது? (CO1, K4)

(அ) நாலடியார் (ஆ) திருக்குறள்

(இ) சிறுபஞ்சமூலம் (ஈ) இனியவை நாற்பது

3. “அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட”
இந்நாலடியார் வரிகள் எந்த இயலில் அமைந்துள்ளது? (CO2, K1)

(அ) இல்லறவியல் (ஆ) துறவறவியல்

(இ) அரசியல் (ஈ) இன்பவியல்

4. பழமொழிக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் எவை?

1) முதுமொழி 2) புதுமொழி 3) பழஞ்சொல் 4) நாதுடி (CO2, K2)

(அ) 2 மற்றும் 4 (ஆ) 1 மற்றும் 3

(இ) 1, 3 மற்றும் 4 (ஈ) அனைத்தும்

5. "நுண்மையும் சுருக்கமும்" என்ற வரிப்பாடல் எதனைக் குறிக்கும்? (CO3, K3)

(அ) முதுமொழி (ஆ) புதுமொழி

(இ) இன்னா நாற்பது (ஈ) திரிகடுகம்

6. திரிகடுகத்தின் பாடல்களின் அமைந்த பாவகை எது? (CO3, K2)

(அ) பரிப்பாட்டு

(ஆ) செப்பலோசை உடைய பா

(இ) அகவற்பா

(ஈ) மருட்பா

7. பொருத்துக : (CO4, K5)

(i) கடுகம் - 1)வேர்

(ii) மூலம் - 2) இன்னிசை வெண்பா

(iii) உத்திர வேதம் - 3) காரம்

(iv) இன்னா நாற்பது - 4) குறள் வெண்பா

(அ) 3, 1, 4, 2 (ஆ) 1, 3, 4, 2

(இ) 1, 3, 2, 4 (ஈ) 2, 1, 3, 4

8. உறுதிக்கூற்று (உ): முதுமொழிக்காஞ்சி நிலையாமையைப் பாடும் நூலாகும்

காரணம் (கா) :காஞ்சி என்ற அகத்திணையால் பெயர்பெற்ற நூல்

(CO4, K4)

(அ) கூற்று (உ), சரி காரணம் (கா) தவறு

(ஆ) கூற்று (உ), காரணம் (கா) இரண்டும் தவறு

(இ) கூற்று (உ), தவறு காரணம் (கா) சரி

(ஈ) கூற்று (உ), காரணம் இரண்டும் சரி

9. 'மின்னும் இளமை உளதாம் என மகிழ்ந்து
பின்னை அறிக என்றல் பேதைமை' என்ற வரிகள்
இடம் பெற்றுள்ள நூல் எது? (CO5, K1)

(அ) நீதிநெறி விளக்கம் (ஆ) நல்வழி

(இ) அறநெறிச்சாரம் (ஈ) நன்னெறி விளக்கம்

10. குமரகுருபரர் நீதி நெறியை எவ்வழி நின்று கூறினார்? (CO5, K4)

(அ) முனிவராய் இருந்து நீதி கூறியவர்

(ஆ) ஆசானாய் இருந்து நீதி கூறியவர்

(இ) பணியின் பொருட்டு நீதி கூறியவர்

(ஈ) பக்தராய் இருந்து நீதி கூறியவர்

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) விருந்தோம்பல் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளை எடுத்துரைக்க. (CO1, K1)

(அல்லது)

(ஆ) ஒரு செயலை முடிப்பதற்குரிய குணங்களாக திருக்குறள் கூறுவதை விளக்கி எழுதுக. (CO1, K2)

12. (அ) நாலடியார் கூறும் செல்வம் நிலையாமை குறித்த செய்திகளை அறம் சார்ந்து விளக்குக. (CO2, K4)

(அல்லது)

(ஆ) கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குபவரின் அவையறிதல் பண்புகளை பழமொழி நானூற்றின் மூலம் தொகுத்தெழுதுக. (CO2, K4)

13. (அ) இன்னா நாற்பது கூறும் ஒப்புமைகள் மற்றும் அமையக் கூடாது என்று கூறும் இன்னா செய்திகளை விளக்குக. (CO3, K2)

(அல்லது)

(ஆ) திரிகடுகம் எடுத்துரைக்கும் அறக் கருத்துகளை நிறுவுக. (CO3, K4)

14. (அ) நல்லொழுக்கம் குறித்த அறச்செய்திகளை சிறுபஞ்சமூலம் தருக. (CO4, K2)

(அல்லது)

(ஆ) முதுமொழிக்காஞ்சி கூறும் அறிவுப் பத்து எடுத்துரைக்கும் அறச் செய்திகள் விளக்குக. (CO4, K2)

15. (அ) நீதிநெறி விளக்கம் எடுத்துரைக்கும் கல்வியின் சிறப்பு மற்றும் நிலையாமை கருத்துகளை விளக்குக. (CO5, K2)

(அல்லது)

(ஆ) அறநெறிச்சாரம் நூல் கூறும் அறக் கருத்துகள் யாவை? (CO5, K2)

பகுதி இ (5 × 8 = 40)

அனைத்து வினாக்களுக்கும் 1,000 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) அறத்துப்பாலில் திருவள்ளுவர் கூறும் சான்றாண்மைக் குணங்களை விளக்கி எழுதுக. (CO1, K2)

(அல்லது)

(ஆ) திருவள்ளுவர் கூறும் அறக் கருத்துகளாக நீர் அறிந்து வழி பொருட்பாலைப் பொருண்மையாகக் கொண்டு எழுதுக. (CO1, K2)

17. (அ) நாலடியார் உணர்த்தும் செல்வம் மற்றும் பொறையுடைமை அதிகாரம் கூறும் அறச் செய்திகள் யாவை? (CO2, K2)

(அல்லது)

(ஆ) கல்வியின் முக்கியத்துவம், சிறப்பு குறித்து பழமொழி நானூறு நூல் வழி ஆராய்ந்த வழி எழுதுக. (CO2, K4)

18. (அ) துன்பின் மூலங்கள் என இன்னா நாற்பது நூல் கூறும் அறக் கருத்துகளை தொகுத்தெழுதுக. (CO3, K2)

(அல்லது)

(ஆ) திரிகடுகம் கூறும் வாழ்வியல் அறங்களை கட்டுரை வடிவில் தருக. (CO3, K2)

19. (அ) தீய குணங்களை நீக்கி நல்வழியை அடைய சிறுபஞ்சமூலம் கூறும் அறக் கருத்துகள் யாது? எவை? (CO4, K2)

(அல்லது)

(ஆ) முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கும் நிலையாமை குறித்த செய்திகளை விளக்கமாக எழுதுக. (CO4, K2)

20. (அ) அறநெறிச்சாரம் கூறும் அறத்தின் சாராம்சத்தை அறியும் வகையில் விளக்குக. (CO5, K4)

(அல்லது)

(ஆ) குமரகுருபரர் கூறும் கல்வி, செல்வம் மற்றும் இளமை குறித்த நீதிக் கருத்துகளைத் தொகுத்து கட்டுரை வரைக. (CO5, K4)

————————

| R1713 |
|---|

| Sub. Code |
|---|
| 411104 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2024**

**First Semester**

தமிழ்

தமிழ் இலக்கியக் கொள்கை

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. இலக்கியக் கொள்கையில் சொல்லப்படும் கருத்துரைகளில் இடம் பெறும் கூறுகள் எத்தனை? (CO1, K2)

(அ) 3 (ஆ) 5

(இ) 7 (ஈ) 11

2. இலக்கியப் படைப்புகளில் பின்பற்றப்படும் வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் ———— ஆகும். (CO2, K4)

(அ) இலக்கியக்கொள்கை (ஆ) இலக்கியக் கோட்பாடு

(இ) இலக்கியக்கூறு (ஈ) இலக்கியத் திறனாய்வு

3. திருக்குறளில் ———— , நீதி என்பவை கொள்கைகளாக அமைந்துள்ளன. (CO4, K4)

(அ) அறம் (ஆ) பொருள்

(இ) இன்பம் (ஈ) வீடு

4. ———— என்பது பார்த்த ஒரு பொருளின் தன்மையை நினைவுக்குக் கொண்டு வருதல் ஆகும். (CO3, K1)

(அ) கற்பனை (ஆ) உள்ளுறை

(இ) உவமம் (ஈ) இறைச்சி

5. வின்செஸ்டர் என்னும் அறிஞர் கற்பனையை எத்தனை வகைகளாகக் கூறுகிறார். (CO3, K1)

(அ) 5 (ஆ) 7

(இ) 3 (ஈ) 4

6. உவமம் ———————— வகைப்படும். (CO1, K1)

(அ) 2 (ஆ) 4

(இ) 5 (ஈ) 6

7. அரங்கிலே மக்கள் வாழ்க்கைப் பிரச்சனைகளை விளக்கி நடித்துக் காட்டுவது ———————— ஆகும். (CO2, K4)

(அ) வடிவம் (ஆ) கற்பனை

(இ) நாடகம் (ஈ) மரபு

8. பெருங்காப்பியத்திற்கு இலக்கணம் கூறும் நூல் ———————— (CO4, K1)

(அ) தொல்காப்பியம் (ஆ) யாப்பருங்கலக்காரிகை

(இ) நன்னூல் (ஈ) தண்டியலங்காரம்

9. வரிசைப்படுத்துக : (CO4, K2)

(அ) மலை, நாடு, கடல், வளநகர், இருசுடர்த்தோற்றம், பருவம்

(ஆ) மலை, நாடு, கடல், வளநகர், பருவம், இருசுடர்த்தோற்றம்

(இ) மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த்தோற்றம்

(ஈ) கடல், மலை,நாடு, வளநகர், பருவம், இருசுடர்த்தோற்றம்

10. "கரும்புத் தோட்டத்திலே" - என்ற பாடலை எழுதியவர் ———————— (CO3, K1)

(அ) பாரதி (ஆ) அண்ணாமலை ரெட்டியார்

(இ) பாரதிதாசன் (ஈ) வண்ணதாசன்

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

11. (அ) இலக்கியக் கொள்கையின் அடிப்படைகளை விளக்கி வரைக. (CO1, K1)

அல்லது

(ஆ) இலக்கியத் தோற்றத்திற்கான காரணங்களை விளக்கி வரைக. (CO1, K1)

12. (அ) இலக்கியங்களின் அடிப்படைக் கூறுகள் குறித்து விளக்கி எழுதுக. (CO2, K2)

அல்லது

(ஆ) உள்ளுறை, உவமம், இறைச்சி குறித்து குறிப்பு வரைக. (CO2, K2)

13. (அ) தொல்காப்பியத்தில் இலக்கியக்கொள்கை - குறிப்பு வரைக. (CO3, K4)

அல்லது

(ஆ) பதினென் கீழ்க்கணக்கு அற நூல்களின் அமைப்பு குறித்து விளக்குக. (CO3, K3)

14. (அ) ஐம்பெருங்காப்பியங்களின் காப்பியக் கொள்கை குறித்து எழுதுக. (CO4, K4)

அல்லது

(ஆ) மேலைநாட்டு காப்பியக்கொள்கை குறித்து விளக்கி எழுதுக. (CO4, K4)

15. (அ) மரபுக்கவிதை, புதுக்கவிதை இவற்றின் உத்திகள் (ம) கொள்கைகள் குறித்து எழுதுக. (CO5, K4)

அல்லது

(ஆ) நாடக உரைநடை இலக்கியக் கொள்கை குறித்து விளக்குக. (CO5, K4)

பகுதி இ (5 × 8 = 40)

அனைத்து வினாக்களுக்கும் 1,000 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) இலக்கியக் கோட்பாடு என்றால் என்ன? அவற்றால் விளையும் நன்மைகள் குறித்து எழுதுக. (CO1, K1)

அல்லது

(ஆ) இலக்கியத் திறனாய்வு மற்றும் வரலாறு குறித்து விளக்கி எழுதுக. (CO1, K2)

17. (அ) இலக்கியங்களின் அடிப்படைக் கூறுகளை ஆராய்ந்து அவற்றின் நாடகத்தன்மை, வடிவம், கற்பனை குறித்து எழுதுக. (CO2, K2)

அல்லது

(ஆ) தன்னுணர்ச்சிப் பாடல்களின் வடிவம், உணர்ச்சி, வகை, கருத்து, கற்பனை குறித்து விளக்கி எழுதுக. (CO2, K2)

18. (அ) தொல்காப்பியரின் திணைக் கோட்பாடுகள் முப்பொருள் குறித்து விளக்கி எழுதுக. (CO3, K4)

அல்லது

(ஆ) சங்க இலக்கியக்கொள்கைகள் உத்தி, வடிவம், உள்ளடக்கம் குறித்து விளக்கி வரைக. (CO3, K4)

19. (அ) காப்பியக்கொள்கை என்றால் என்ன? அவற்றில் கதை மாந்தர் (ம) கதைகள் பற்றிய கொள்கைக்கோட்பாடு குறித்து ஆராய்க. (CO4, K4)

அல்லது

(ஆ) சிறுகதை, புதின இலக்கியக்கொள்கைக் கோட்பாடு குறித்து விளக்கி எழுதுக. (CO4, K4)

20. (அ) இலக்கியக் கொள்கைகள் தோன்றுவதற்கான காரணங்களையும் அவற்றின் புதிய வகைமைக் கோட்பாடுகளையும் விளக்கி எழுதுக. (CO5, K4)

அல்லது

(ஆ) மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகியவற்றின் இலக்கியக் கொள்கைகளை ஆராய்க. (CO5, K4)

| R1714 |
|---|

| Sub. Code |
|---|
| 411105 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2024

**First Semester**

தமிழ்

தமிழக வரலாறும் பண்பாடும்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 1 = 10)$

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மெய்க்கீர்த்திகளை முதலில் எழுதிய அரசமரபினர் யார்? (CO1, K2)

   (அ) சேரர் (ஆ) சோழர்

   (இ) பாண்டியர் (ஈ) பல்லவர்

2. புதிய கற்காலத்தைச் சேர்ந்த தேய்த்து மெருகிட்ட கற்கருவிகள் எங்குக் கிடைத்தன? (CO1, K2)

   (அ) பையம்பள்ளி

   (ஆ) காஞ்சிபுரம்

   (இ) தஞ்சாவூர்

   (ஈ) மாமல்லபுரம்

3. தமிழ்ச் சங்கத்தைப் பற்றிய குறிப்புகளை முதலில் கூறிய உரை எது? (CO2, K2)

   (அ) சிந்தாமணி உரை

   (ஆ) தொல்காப்பிய உரை

   (இ) இறையனார் களவியல் உரை

   (ஈ) சிலப்பதிகார உரை

4. வாதாபி போரில் சாளுக்கியரை வென்ற பல்லவ மன்னர் யார்? (CO2, K1)

(அ) விஷ்ணுகோபன் (ஆ) சிம்மவர்மன்

(இ) மகேந்திரவர்மன் (ஈ) நரசிம்மவர்மன்

5. 'பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்' என்று போற்றப்பட்டவர் யார்? (CO3, K1)

(அ) விசயாலயன் (ஆ) கண்டராதித்தர்

(இ) சுந்தர சோழர் (ஈ) பராந்தகன்

6. முதலாம் இராசேந்திரனுக்குரிய பட்டப்பெயர் எது? (CO3, K2)

(அ) கங்கை கொண்டான் (ஆ) சிவபாதசேகரன்

(இ) உத்தம சோழன் (ஈ) மும்முடிச் சோழன்

7. தெள்ளாற்றில் நந்திவர்மனுடன் போரிட்ட பாண்டியன் யார்? (CO4, K1)

(அ) நெடுஞ்சடையன் (ஆ) சீவல்லபன்

(இ) இராசசிம்மன் (ஈ) வரகுணன்

8. சிதம்பரம் கோயிலின் வடபுறத்துக் கோபுரத்தைக் கட்டிய விசயநகர அரசன் யார்? (CO4, K1)

(அ) கம்பணன் (ஆ) நரசநாயக்கன்

(இ) வீரநரசிம்மன் (ஈ) கிருஷ்ணதேவராயன்

9. சத்தியஞான சபையைத் தோற்றுவித்தவர் யார்? (CO5, K1)

(அ) வள்ளலார் (ஆ) தாயுமானவர்

(இ) குமரகுருபரர் (ஈ) அருணகிரி நாதர்

10. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என்று போற்றப்பட்டவர் யார்? (CO5, K1)

(அ) தேவநேயப் பாவாணர்

(ஆ) பெருஞ்சித்திரனார்

(இ) மறைமலையடிகள்

(ஈ) பரிதிமாற்கலைஞர்

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

பின்வரும் வினாக்களுக்கு 500 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) ஆதிச்சநல்லூர் அகழாய்வு குறித்து எழுதுக. (CO1, K2)

அல்லது

(ஆ) அரிக்கமேடு அகழாய்வின் வழி தமிழர்களின் பண்டைய நாகரிகத்தை வெளிப்படுத்துக. (CO1, K2)

12. (அ) சங்க காலச் சமூக நிலையைப் புலப்படுத்துக. (CO2, K3)

அல்லது

(ஆ) பல்லவர் கால சமயநிலையைத் தெளிவுபடுத்துக. (CO2, K3)

13. (அ) சோழர்கள் சாளுக்கியர்களை வென்றமையைக் குறிப்பிடுக. (CO3, K2)

அல்லது

(ஆ) சோழர் ஆட்சியில் வழக்கிலிருந்த ஊராட்சி முறை குறித்து எழுதுக. (CO3, K2)

14. (அ) பாண்டியர்களின் வீழ்ச்சிக்கானக் காரணங்களைப் பட்டியலிடுக. (CO4, K5)

அல்லது

(ஆ) இராணி மங்கம்மாள் பற்றிக் குறிப்பு வரைக. (CO4, K2)

15. (அ) ஆங்கிலேயர்களை வீரபாண்டிய கட்டபொம்மன் எதிர்த்தமையைக் குறிப்பிடுக. (CO5, K3)

அல்லது

(ஆ) வள்ளலாரின் சமூகப் பணிகளை எடுத்துரைக்க. (CO5, K2)

## பகுதி இ (5 × 8 = 40)

பின்வரும் வினாக்களுக்கும் 1,000 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் தமிழக வரலாற்றை விளக்குக. (CO1, K2)

அல்லது

(ஆ) கல்வெட்டு, செப்பேடுகளின் வழி வெளிப்படும் தமிழக வரலாற்றை விவரிக்க. (CO1, K2)

17. (அ) சங்க காலத்தில் ஆண்ட மூவேந்தர் வரலாற்றை எடுத்துரைக்க. (CO2, K1)

அல்லது

(ஆ) பல்லவர்கால ஆட்சி முறை குறித்து விளக்கி எழுதுக. (CO2, K2)

18. (அ) முதலாம் இராசராசன் மற்றும் இராசேந்திரனின் தனிச் சிறப்புக்களை விவரிக்க. (CO3, K3)

அல்லது

(ஆ) பிற்காலச் சோழர்களின் கடல் கடந்த தொடர்புகளை விவரிக்க. (CO3, K3)

19. (அ) பாண்டியப் பேரரசின் உருவாக்கத்தை விளக்கி எழுதுக. (CO4, K3)

அல்லது

(ஆ) தமிழகத்தில் நடைபெற்ற விசயநகரத்தார் ஆட்சியின் சிறப்புக்களைக் குறிப்பிடுக. (CO4, K2)

20. (அ) இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்களிப்பை ஆராய்க. (CO5, K4)

அல்லது

(ஆ) தமிழக எல்லை மீட்புப் போராட்ட வரலாற்றை ஆய்ந்துரைக்க. (CO5, K4)

———————

| R1715 |
|---|

| Sub. Code |
|---|
| 411106 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2024**

**First Semester**

தமிழ்

விருப்பப்பாடம் — கணினித் தமிழ்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

அனைத்து வினாக்களுக்கும் தேர்ந்தெடுத்து விடையளிக்கவும்.

1. கணினியில் வன்பொருள் மற்றும் மென்பொருளை இணைக்கும் நிரல்களின் தொகுப்பு (CO1, K1)

   (அ) நினைவகம் (ஆ) மையச் செயலகம்

   (இ) இயங்குதளம் (ஈ) குறுவட்டு இயக்கி

2. இணையத்தில் உலாவியாக செயல்படுவது (CO1, K1)

   (அ) பிங் (ஆ) கூகுள் தேடுபொறி

   (இ) கூகுள் குரோம் (ஈ) யாகூ

3. கணினியில் ஒருங்குறி முறையில் தமிழ்த்தட்டச்சிடப் பயன்படும் மென்பொருள் (CO2, K1)

   (அ) வாணி (ஆ) நாவி

   (இ) எ.கலப்பை (ஈ) எழில்

4. ஒருங்குறி என அழைக்கப்படுவது எது? (CO2, K2)

   (அ) TAM (ஆ) TAB

   (இ) UNICODE (ஈ) ASCII

5. முதன் முதலில் தமிழை இணையத்தில் ஏற்றி வைத்த பெருமைக்குரியவர் (CO3, K1)

(அ) இராமசாமி (ஆ) கந்தசாமி

(இ) சிவத்தம்பி (ஈ) நா. கோவிந்தசாமி

6. விக்கிப் பீடியாவின் கட்டற்ற அகரமுதல (CO3, K1)

(அ) விக்கித்தரவு (ஆ) விக்கிப்பீடியா

(இ) விக்சனரி (ஈ) விக்கிமூலம்

7. குறுஞ்செயலிகளை உருவாக்க உதவும் மென்பொருள் (CO4, K2)

(அ) கோரல்

(ஆ) உபுண்டு

(இ) ஆண்ட்ராய்டு ஸ்டுடியோ

(ஈ) பொன்வழி

8. தமிழ் வலைப்பதிவுகளைத் திரட்டிய இணைய தளம் எது? (CO4, K2)

(அ) தமிழ்ச்சாரல் (ஆ) தமிழ்மணம்

(இ) கணித்தமிழ் (ஈ) வலை உலகம்

9. படங்களில் உள்ள எழுத்துகளை மின்வருடி ஒருங்குறி வடிவில் மாற்றும் நுட்பம் (CO5, K1)

(அ) ஒளி எழுத்துணரி (ஆ) கூகுள் மொழியாக்கம்

(இ) எழுத்துருமாற்றி (ஈ) குறியேற்றம்

10. யாப்பிலக்கண மரபுகளைப் பகுத்தறிய உதவும் இணையதளம் (CO5, K1)

(அ) மென்தமிழ் (ஆ) அவலோகிதம்

(இ) தமிழி (ஈ) தமிழ்வெளி

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) கணியியின் உள்ளீட்டுக் கருவிகளைப் பற்றி எழுதுக. (CO1, K1)

(அல்லது)

(ஆ) இயங்குதளங்களின் செயல்பாடுகளை விவரி. (CO1, K2)

12. (அ) தமிழ் எழுத்துருக்களின் வளர்ச்சியை எடுத்துரைக்க. (CO2, K1)

(அல்லது)

(ஆ) அடோப் பேஜ்மேக்கர் மென்பொருளின் பயன்பாட்டை விளக்குக. (CO2, K2)

13. (அ) இணையத்தில் தமிழின் வளர்ச்சியை எடுத்தியம்புக. (CO3, K1)

(அல்லது)

(ஆ) விக்சனரியை மேம்படுத்தும் வழிகளை இயம்புக. (CO3, K1)

14. (அ) வலைப்பதிவுகளின் தனித்தன்மைகளை விவரிக்க. (CO4, K3)

(அல்லது)

(ஆ) தமிழ் ஒலி நூல்களை உருவாக்கும் வழிமுறைகள் யாவை? (CO4, K2)

15. (அ) தமிழ் எழுத்துருக்களை மாற்றுவதற்கான வழிமுறைகள் யாவை? (CO5, K1)

(அல்லது)

(ஆ) குரலை எழுத்தாக மாற்றுவதற்கான கணினி நுட்பங்கள். (CO5, K2)

பகுதி இ (5 × 8 = 40)

அனைத்து வினாக்களுக்கும் 1,000 சொற்களில் விடையளிக்க.

16. (அ) தேடுபொறிகளில் தமிழில் தேடும் நுட்பங்கள் குறித்துக் கட்டுரை வரைக. (CO1, K1)

(அல்லது)

(ஆ) தமிழ் மென்பொருள்களின் வளர்ச்சியை மதிப்பிடுக. (CO1, K1)

17. (அ) தமிழ்த்தட்டச்சு மென்பொருள்களைப் பயன்படுத்தும் வழிமுறைகளை விவரி. (CO2, K1)

(அல்லது)

(ஆ) வரைகலை நுட்பத்தை கோரல் டிரா மென்பொருள் வழியாக விளக்குக. (CO2, K1)

18. (அ) இணையத்தமிழ் மாநாடுகள் குறித்து கட்டுரைக்க. (CO3, K3)

(அல்லது)

(ஆ) தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் தமிழ்ப் பணிகளைப் புலப்படுத்துக. (CO3, K1)

19. (அ) தமிழ்க் குறுஞ்செயலிகளின் பயன்பாடுகளை எடுத்துரைக்க. (CO4, K2)

(அல்லது)

(ஆ) தமிழ் மின் உள்ளடக்கங்களுக்கான காப்புரிமங்களைத் தொகுத்துரைக்க. (CO4, K3)

20. (அ) கணினி வழியாக மொழி பெயர்ப்பதில் தமிழின் நிலையை ஆய்க. (CO5, K4)

(அல்லது)

(ஆ) தமிழ் மின் அகராதிகளை வகைப்படுத்தி அவற்றின் சிறப்புகளைப் புலப்படுத்துக. (CO5, K4)

———————

| R1716 |
|---|

| Sub. Code |
|---|
| 411301 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2024**

**Third Semester**

**Tamil**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 1 = 10)$

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' என்பது யாருடைய கூற்று? (CO1, K1)

(அ) சாத்தனார் (ஆ) இளங்கோ வேண்மாள்

(இ) வாத்திகன் (ஈ) தேவந்தி

2. புத்த பீடிகையைக் காவல் செய்து வந்தது யார்? (CO1, K1)

(அ) காயசண்டிகை

(ஆ) இலக்குமி

(இ) மணிமேகலா தெய்வம்

(ஈ) தீவதிலகை

3. சுரமையை மணந்தால் சீவகனை 'காமதிலகன்' என அழைப்போம் என்றது யார்? (CO2, K2)

(அ) புத்திசேனன் (ஆ) கோவிந்தன்

(இ) நந்தட்டன் (ஈ) சயந்தன்

4. சீவகன் எந்த வடிவுடன் சுரமஞ்சரியின் மாளிகையை அடைந்தான்? (CO2, K2)

(அ) வணிகன் (ஆ) முதியவன்

(இ) வேடன் (ஈ) வேந்தன்

5. அசோகவனத்தில் சீதைக்குத் துணையாக இருந்தது யார்? (CO3, K2)

(அ) மண்டோதரி (ஆ) நீலமாலை

(இ) திரிசடை (ஈ) சூர்ப்பணகை

6. பாண்டவர்களை அழிக்க வேள்வி செய்யுமாறு காளமா முனிவரைக் கேட்டது யார்? (CO3, K2)

(அ) துரியோதனன் (ஆ) துச்சாதனன்

(இ) சகுனி (ஈ) கர்ணன்

7. திண்ணனார் பிறந்த நாடு எது? (CO4, K1)

(அ) பொத்தப்பி நாடு (ஆ) திருமுனைப்பாடி நாடு

(இ) சேரநாடு (ஈ) வத்தவநாடு

8. கண்ணப்பர் எத்தனை நாட்களில் முத்தியடைந்தார்? (CO4, K1)

(அ) நான்கு (ஆ) ஐந்து

(இ) ஆறு (ஈ) ஏழு

9. மரியைப் பார்த்து வினாக்களைத் தொடுத்த பெண்ணின் பெயர் என்ன? (CO5, K1)

(அ) இசபெல்லா (ஆ) சாந்தி

(இ) ஜெனிபர் (ஈ) ஜெஸிந்தா

10. நபிகளை வேதம் ஓதுக என்று கூறியவர் யார்? (CO5, K2)

(அ) கதீஜா (ஆ) அபூஜகில்

(இ) ஹப்பாய் (ஈ) ஜிபுறயீல்

பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு 500 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) இளங்கோவடிகள் வஞ்சிக் காண்டத்தின் முடிவில் கூறும் அறங்கள் யாவை? (CO1, K1)

(அல்லது)

(ஆ) மணிமேகலை பாத்திரம் பெற்ற செய்தியை எடுத்துரைக்க. (CO1, K2)

12. (அ) சீவகனைக் கண்ட அவனது பெற்றோரின் மகிழ்ச்சியை புலப்படுத்துக. (CO2, K3)

(அல்லது)

(ஆ) சீவகனைக் கண்ட மனைவியர் மகிழ்ச்சியைக் குறிப்பிடுக. (CO2, K2)

13. (அ) சீதையிடம் திரிசடை உரைத்த நற்குறிப்புகள் யாவை? (CO3, K1)

(அல்லது)

(ஆ) காளமா முனிவருக்கு துரியோதனன் செய்த உபசரிப்புகளை எழுதுக. (CO3, K3)

14. (அ) திண்ணனாரின் தோற்றச் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுக. (CO4, K2)

(அல்லது)

(ஆ) திண்ணனாரின் வேட்டைத் திறத்தினை எடுத்துரைக்க. (CO4, K2)

15. (அ) தேம்பாவணி குறித்து குறிப்பு வரைக. (CO5, K3)

(அல்லது)

(ஆ) சீறாப்புராணத்தின் நூலமைப்பு குறித்து எழுதுக. (CO5, K3)

பகுதி இ $(5 \times 8 = 40)$

பின்வரும் வினாக்களுக்கு 1,000 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) மாடலன், செங்குட்டுவனிடம் உரைத்த செய்திகளைத் தொகுத்தெழுதுக. (CO1, K3)

(அல்லது)

(ஆ) பாத்திரமரபு கூறிய காதை வழி வெளிப்படும் செய்திகளை விவரிக்க. (CO1, K2)

17. (அ) சீவகனுக்கும் அவனது தோழர்களுக்கும் இடையேயான உரையாடலை விளக்குக. (CO2, K2)

(அல்லது)

(ஆ) சீவகன், சுரமஞ்சரியை மணந்தமையை விவரிக்க. (CO2, K2)

18. (அ) சீதையிடம் அனுமன் வேண்டுவனவற்றைத் தொகுத்தெழுதுக. (CO3, K3)

(அல்லது)

(ஆ) நச்சுப் பொய்கை சருக்கம் வழி அறியலாகும் கருத்துகளை விவரிக்க. (CO3, K2)

19. (அ) திண்ணனார் வேடர்குலத் தலைவனாக முடிசூட்டப்பெற்றதை விவரிக்க. (CO4, K2)

(அல்லது)

(ஆ) திண்ணனார், கண்ணப்பரான வரலாற்றை விளக்கி எழுதுக. (CO4, K4)

20. (அ) இயேசுவை இடையர்கள் போற்றியுரைத்த மொழிகளைக் கொண்டு அவர் இறைமகன் என்பதை ஆய்ந்துரைக்க. (CO5, K5)

(அல்லது)

(ஆ) முகம்மது நபிப்பட்டம் பெற்ற வரலாற்றை மதிப்பிடுக. (CO5, K5)

————————

| R1717 |
|---|

| Sub. Code |
|---|
| 411302 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2024**

**Third Semester**

**Tamil**

தொல்காப்பியம் - பொருளதிகாரம்

(முன்னைந்து இயல்கள்)

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 1 = 10)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. ஒருபாற் கூற்றிற்கு உரியவர் யார்? (CO1, K2)

(1) செவிலி, நற்றாய்

(2) செவிலி, தலைவன்

(3) பாங்கன், தலைவன்

(4) தலைவி, தலைன்

(அ) 1 மட்டும் சரி (ஆ) 2, 3 சரி

(இ) 1, 2, 3 சரி (ஈ) 1, 2, 3, 4 சரி

2. 'நடுவன் உள்ளது' என்று கூறப்பெறும் திணை யாது? (CO1, K2)

(அ) குறிஞ்சி (ஆ) நெய்தல்

(இ) பாலை (ஈ) மருதம்

3. "கைக்கிளை" – இச்சொல்லில் "கை" என்பதன் பொருள் யாது? (CO2, K2)

(அ) சிறுமை (ஆ) பெருமை

(இ) உயர்வு (ஈ) உறுப்பு

4. கீழ்கண்டவற்றுள் சரியான வரிசைமுறை எது? (CO2, K4)

(அ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

(ஆ) முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை

(இ) முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல்

(ஈ) குறிஞ்சி, நெய்தல், பாலை, மருதம், முல்லை

5. தலைவன், தலைவியிடம் நேரடியாகக் கூற்று நிகழ்த்தாதவர்? (CO3, K4)

(அ) செவிலி (ஆ) கண்டோர்

(இ) தோழி (ஈ) நற்றாய்

6. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ———— ஆல் இப்பெயர் பெற்றது. (CO3, K4)

(அ) பூ (ஆ) நீர்நிலை

(இ) நிலம் (ஈ) கருப்பொருள்

7. உள்ளுறை எத்தனை வகைப்படும்? (CO4, K2)

(அ) 4 (ஆ) 5

(இ) 6 (ஈ) 7

8. ஊடல் என்பது எந்நிலத்துக்கு உரியது? (CO4, K2)

(அ) குறிஞ்சி (ஆ) முல்லை

(இ) மருதம் (ஈ) நெய்தல்

9. "அறத்தொடு நிற்றல்" வகைகள் எத்தனை? (CO5, K6)

(அ) 5 (ஆ) 7

(இ) 9 (ஈ) 11

10. மொழி எதிர் மொழிதல் ———— உரித்தே. (CO5, K6)

(அ) தலைவன் (ஆ) தலைவி

(இ) தோழி (ஈ) பாங்கன்

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11\. (அ) நிலத்தின் பாகுபாடுகளை வரையறுக்க. (CO1, K2)

அல்லது

(ஆ) உவமத்தின் வகைகளைக் கூறி விளக்குக. (CO1, K2)

12\. (அ) வெட்சித் திணையின் இலக்கணம் கூறி அதன் துறைகளை எடுத்தியம்புக. (CO2, K2)

அல்லது

(ஆ) வாகைத் திணையின் பாகுபாடுகள் யாவை? (CO2, K4)

13\. (அ) ஐயத்தை நீக்கும் கருவிகள் யாவை? விளக்குக. (CO3, K4)

அல்லது

(ஆ) களவின் கண் செவிலிக்கு நிகழும் கூற்றினை வரையறுக்க. (CO3, K4)

14\. (அ) குறியிடம் எத்தனை வகைப்படும்? விளக்குக. (CO4, K2)

அல்லது

(ஆ) கனவின் கண் தலைவியிடத்து நிகழும் மெய்ப்பாடுகள் யாவை? (CO4, K5)

15\. (அ) இளையோர் கூற்று நிகழும் இடங்கள் யாவை? (CO5, K6)

அல்லது

(ஆ) ஊடல் தணிக்கும் வாயில்கள் குறித்து விளக்குக. (CO5, K6)

## பகுதி இ (5 × 8 = 40)

அனைத்து வினாக்களுக்கும் 1,000 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16\. (அ) பிரிவின் வகைகளைக் கூறி விளக்குக. (CO1, K2)

அல்லது

(ஆ) தலைவன் கூற்று நிகழும் இடங்களை எடுத்துரைக்க. (CO1, K2)

17. (அ) அகத்திணை சுட்டும் புலனெறி வழக்கத்தினை வரையறுக்க. (CO2, K2)

அல்லது

(ஆ) உழிஞைத் திணையின் போர் முயற்சிகள் யாவை? (CO2, K1)

18. (அ) தலைவிக்கு நிகழும் கூற்றுகள் குறித்து வரைக. (CO3, K4)

அல்லது

(ஆ) களவின் கண் செவிலிக்கு நிகழும் கூற்று குறித்து விளக்கம் தருக. (CO3, K4)

19. (அ) தோழி அறத்தொடு நிற்கும் இடங்கள் குறித்து எழுதுக. (CO4, K2)

அல்லது

(ஆ) உள்ளுறையின் வகைகளைக் கூறி விளக்குக. (CO4, K2)

20. (அ) வாயிலோர் கூற்று நிகழும் முறைமையினை விவரிக்க. (CO5, K6)

அல்லது

(ஆ) ஐந்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களை தெளிவுபடுத்துக. (CO5, K6)

———————

| R1718 |
|---|

| Sub. Code |
|---|
| 411303 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2024**

**Third Semester**

**Tamil**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 1 = 10)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. பரணிக்கு இலக்கணம் கூறும் நூல் எது? (CO1, K2)

   (அ) வெண்பாப் பாட்டியல்

   (ஆ) தொன்னூல் விளக்கம்

   (இ) நவுநீதப் பாட்டியல்

   (ஈ) இலக்கண விளக்கப்பாட்டியல்

2. போர்க்களத்தில் பரண் மேல் நின்று பாடுவது ———— இலக்கியமாகும். (CO1, K1)

   (அ) உலா (ஆ) தூது

   (இ) பரணி (ஈ) சதகம்

3. உலா இலக்கியத்திற்கு முன்னோடி ———— ஆகும். (CO2, K1)

   (அ) தொல்காப்பியம்

   (ஆ) முத்தொள்ளாயிரம்

   (இ) திருவாரூர் உலா

   (ஈ) தமிழன் உலா

4. மகளிர் உலகியலை அறியும் நிலை எய்தாப் பருவம் எது? (CO2, K2)

(அ) மேதை (ஆ) பெதும்பை

(இ) மங்கை (ஈ) மடந்தை

5. கலம்பகம் ———— உறுப்புகளைக் கொண்டது. (CO3, K1)

(அ) 12 (ஆ) 15

(இ) 18 (ஈ) 21

6. மதுரைக் கலம்பகம் நூலின் ஆசிரியர் யார்? (CO3, K2)

(அ) வீரமாமுனிவர் (ஆ) இரட்டையர்கள்

(இ) குமரகுருபரர் (ஈ) படிக்காசுப் புலவர்

7. ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான பருவங்களாக பிள்ளைத் தமிழ் கூறுவது ———— (CO4, K1)

(அ) 5 (ஆ) 7

(இ) 9 (ஈ) 11

8. பிள்ளைத் தமிழ் பாடப்படாத கடவுள் ————. (CO4, K1)

(அ) பிரம்மன் (ஆ) திருமால்

(இ) சிவன் (ஈ) முருகன்

9. குறவஞ்சி இலக்கியத்தில் தலைசிறந்தது ———— ஆகும். (CO5, K1)

(அ) அழகர் குறவஞ்சி (ஆ) மீனாட்சியம்மை குறம்

(இ) தமிழரசி குறவஞ்சி (ஈ) திருக்குற்றாலக் குறவஞ்சி

10. சிற்றிலக்கியத்தில் அகநூலாயினும் தலைவன் தலைவி பெயர் சுட்டும் நூல் எது? (CO5, K2)

(அ) உலா (ஆ) தூது

(இ) குறவஞ்சி (ஈ) கலம்பகம்

## பகுதி ஆ (5 × 5 = 25)

கீழ்க்காணும் வினாக்களுக்கு **500** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) கலிங்கத்துப்பரணி நூல் குறிப்பு வரைக. (CO1, K1)

(அல்லது)

(ஆ) பரணியின் உறுப்புகள் எத்தனை? வரிசைப்படுத்துக. (CO1, K1)

12. (அ) ஒட்டக்கூத்தரின் சிறப்புகளை விளக்கிக் கூறுக. (CO2, K2)

(அல்லது)

(ஆ) இராசராசச் சோழனின் போர்த்திறம் பற்றி எழுதுக. (CO2, K3)

13. (அ) கலம்பகம் என்றால் என்ன? விளக்கம் தருக. (CO3, K2)

(அல்லது)

(ஆ) மதுரைக்கலம்பகம் –நூல்குறிப்பு எழுதுக. (CO3, K3)

14. (அ) சேக்கிழார் பிள்ளைத் தமிழின் சிறப்புகளைக் கூறுக. (CO4, K1)

(அல்லது)

(ஆ) பிள்ளைத் தமிழ் பருவங்கள் மற்றும் பாடப்படும் மாதங்களையும் குறிப்பிடுக. (CO4, K3)

15. (அ) குற்றால மலைவளம் குறித்து எழுதுக. (CO5, K2)

(அல்லது)

(ஆ) சிங்கன் சிங்கியிடம் வினவும் காட்சியினைக் கூறுக. (CO5, K4)

பகுதி இ (5 × 8 = 40)

அனைத்து வினாக்களுக்கும் **1000** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

16. (அ) 'பரணி' நூல் எழுந்த பான்மையை விளக்கி வரைக. (CO1, K2)

(அல்லது)

(ஆ) கலிங்கத்துப்பரணி வழி அறியலாகும் செய்திகளை வரையறுக்க. (CO1, K2)

17. (அ) இராசராசச் சோழனுலா பற்றி கட்டுரை வரைக. (CO2, K2)

(அல்லது)

(ஆ) இராசராசச் சோழனின் போர் மற்றும் வெற்றி சிறப்புகளை நூல் வழி நின்று விளக்குக. (CO2, K1)

18. (அ) குமரகுருபரர் பற்றிய தகவல்களைக் கூறுக. (CO3, K1)

(அல்லது)

(ஆ) மகளிர் தொழிலுக்குரிய செய்திகளை அமைத்து புலவர்கள் பாடிய திறத்தை மதுரைக்கலம்பகம் வழி புலப்படுத்துக. (CO3, K1)

19. (அ) சேக்கிழார் பிள்ளைத்தமிழ் புலவர் இலக்கியமாகும் நிறுவுக. (CO4, K4)

(அல்லது)

(ஆ) பிள்ளைத் தமிழ் பற்றிய பொதுவான கருத்துக்களை வரையறுக்க. (CO4, K4)

20. (அ) சிங்கன், சிங்கி உடையாடல்களைப் பற்றி விவரிக்க. (CO5, K4)

(அல்லது)

(ஆ) குறத்தி குறி கூறும் பாங்கினைப் பகர்க. (CO5, K4)

———————

| R1719 |
|---|

| Sub. Code |
|---|
| 411304 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

Tamil

ஆராய்ச்சி நெறிமுறைகள்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 1 = 10)$

**அனைத்து** வினாக்களுக்கும் தேர்ந்தெடுத்து விடையளிக்கவும்.

1. 'ஆய்தல்' என்ற சொல்லுக்கு உள்ளதன் நுணுக்கம் என விளக்கம் தரும் நூல் (CO1, K1)

   (அ) யாப்பருங்கலம் (ஆ) நன்னூல்

   (இ) தொல்காப்பியம் (ஈ) தொன்னூல் விளக்கம்

2. ஆய்வுத்தலைப்பைத் தேர்வுசெய்யும் முன் ஆய்வாளர் செய்ய வேண்டியது (CO1, K2)

   (அ) தரவு திரட்டுதல்

   (ஆ) வினாநிரல் உருவாக்குதல்

   (இ) பட்டியல் உருவாக்குதல்

   (ஈ) முன்னாய்வுகளை அறிதல்

3. கல்வியறிவில்லாதவர்களுக்குப் பயன்படுத்தும் வினாநிரல் (CO2, K1)

   (அ) உண்மை வினாநிரல்

   (ஆ) படம்சார் வினாநிரல்

   (இ) கலவை வினாநிரல்

   (ஈ) கருத்தறி வினாநிரல்

4. நாட்டுப் பாடல்களைச் சேகரிப்போர் மேற்கொள்ளும் நேர்காணல் (CO2, K2)

(அ) ஆணைவழியிட்ட நேர்காணல்

(ஆ) ஆழ்ந்த நேர்காணல்

(இ) ஆணைவழிப்படா நேர்காணல்

(ஈ) ஒருமுகப்படுத்தும் நேர்காணல்

5. உற்றுநோக்கலின் முதல்படிநிலை யாது? (CO3, K1)

(அ) மொழிநடை (ஆ) உடலசைவு

(இ) உரையாடல் (ஈ) புலனுணர்வு

6. கிடைக்கும் தரவுகளுக்கேற்ப உருவாக்கிக்கொள்ளும் தற்காலிகத் தீர்வு (CO3, K2)

(அ) மேற்கோள் (ஆ) கருதுகோள்

(இ) கொள்கை (ஈ) கோட்பாடு

7. பரிமேலழகரின் உரைப்பகுதியை எந்த ஆய்வின் சான்றாகக் கருதலாம். (CO4, K1)

(அ) வராற்று ஆய்வு

(ஆ) ஒப்பீட்டு ஆய்வு

(இ) அமைப்பியல் ஆய்வு

(ஈ) புள்ளிவிவர ஆய்வு

8. ஆய்வுத்துறைக்குரிய தலையாய அறம் (CO4, K2)

(அ) மேற்கோள் அறம் (ஆ) எழுத்து அறம்

(இ) உண்மை (ஈ) நேர்மை

9. ஆய்வேட்டு மொழிநடையில் தவிர்க்கவேண்டிய கூறு (CO5, K2)

(அ) செறிவான மொழிநடை

(ஆ) மயக்க நடை

(இ) எளிய மொழி நடை

(ஈ) தெளிவான நடை

10. “Questionnaire’ என்பது தமிழில் (CO5, K1)

(அ) வினாவங்கி (ஆ) வினாநிரல்

(இ) ஆய்வுத் தொகுப்பு (ஈ) ஆய்வறிக்கை

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) ஆய்வாளருக்குரிய தகுதிகள் யாவை? (CO1, K4)

(அல்லது)

(ஆ) ஆய்வு சான்றுகள் பற்றி விளக்குக. (CO1, K5)

12. (அ) கள ஆய்வில் பின்பற்ற வேண்டிய அறங்களை இயம்புக. (CO2, K3)

(அல்லது)

(ஆ) நேர்காணலின் வகைகளை விளக்குக. (CO2, K3)

13. (அ) கட்டுப்பாடற்ற உற்றுநோக்கல் என்பது யாது? (CO3, K3)

(அல்லது)

(ஆ) கருதுகோளும் அதன் இன்றியமையாமையும் குறித்து விவரி. (CO3, K5)

14. (அ) ஒப்பியல்முறை ஆய்வுகள் பற்றி எழுதுக. (CO4, K4)

(அல்லது)

(ஆ) ஆய்வில் மேற்கோளின் தேவையை ஆய்க. (CO4, K3)

15. (அ) ஆய்வாளர் மூன்றுபடிகள் எழுதுவதன் தேவையை எடுத்தியம்புக. (CO5, K6)

(அல்லது)

(ஆ) ஆய்வாளருக்கான மொழிநடை பற்றி விளக்குக.(CO5, K5)

பகுதி இ (5 × 8 = 40)

**அனைத்து** வினாக்களுக்கும் 1000 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) ஆய்வுக் களங்களைக் கண்டறியும் நுட்பங்களை விவரி. (CO1, K4)

(அல்லது)

(ஆ) ஆய்வுச் சிக்கலின் தோற்றுவாய்களை விவரி. (CO1, K2)

17. (அ) கள ஆய்வில் தரவுகளைச் சேகரிக்கும் வழிமுறைகளை இயம்புக. (CO2, K3)

(அல்லது)

(ஆ) ஆய்வுக்கு நேர்காணலின் தேவையை ஆராய்க. (CO2, K5)

18. (அ) உற்றுநோக்கலின் தன்மைகளும், வகைகளும் குறித்துக் கட்டுரை வரைக. (CO3, K6)

(அல்லது)

(ஆ) கருதுகோளை வகைப்படுத்தி விளக்குக. (CO3, K6)

19. (அ) அறிவியல் முறை ஆய்வுகளின் பயன்களை விரித்துரைக்க. (CO4, K3)

(அல்லது)

(ஆ) மேற்கோளைத் தேர்ந்தெடுப்பதற்கான நுட்பங்களைப் புலப்படுத்துக. (CO4, K3)

20. (அ) ஆய்வாளர் தம் மொழிநடையில் தவிர்க்கத்தக்க கூறுகளை எடுத்தியம்புக. (CO5, K5)

(அல்லது)

(ஆ) கணினி அச்சாக்கத்தில் ஏற்படும் பிழைகளையும், திருத்தும் வழிமுறைகளையும் விளக்குக. (CO5, K6)

———————

**R1720**

| Sub. Code |
|---|
| 411305 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2024**

**Third Semester**

**Tamil**

**விருப்பப் பாடம் – ஊடகவியல்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. இந்தியாவின் முதல் செய்தித்தாள் எது? (CO1, K1)

   (அ) டெய்லி கரண்ட்

   (ஆ) பெங்கால் கெசட்

   (இ) இந்தியன் எக்ஸ்ப்ரஸ்

   (ஈ) தி இந்து

2. இந்திய இதழியலின் தந்தை யார்? (CO1, K1)

   (அ) ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி

   (ஆ) மீட்டர் ரீட்

   (இ) பாரதி

   (ஈ) திலிர்

3. திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தின் அலைவரிசை எண் (CO3, K6)

   (அ) 102.4 (ஆ) 106.5

   (இ) 93.5 (ஈ) 91.4

4. AIR என்பதன் விரிவாக்கம் (CO3, K6)

(அ) Airtel in Racio (ஆ) All India Radio

(இ) All India Ratico (ஈ) Air India

5. CPU - விரிவாக்கம் (CO4, K5)

(அ) Central Processing Unit

(ஆ) Computer Processing Unit

(இ) Control Primary Unit

(ஈ) Central Passing Unit

6. பருவ இதழ்கள் எத்தனை வகைப்படும்? (CO1, K1)

(அ) 4 (ஆ) 6

(இ) 7 (ஈ) 3

7. உள்ளிடைப் பேசியின் ஆங்கிலப் பதம் (CO5, K5)

(அ) Cell phone (ஆ) Land line

(இ) Telegram (ஈ) Mobile phone

8. வானொலியைக் கண்டுபிடித்தவர்? (CO5, K5)

(அ) மார்க்கோனி (ஆ) ஆடம் ஸ்மித்

(இ) சார்லஸ் பாப்பேஜ் (ஈ) அலெக்சாண்டர் கிரஹெம்பெல்

9. மின்னணு அஞ்சல் என்பது (CO5, K5)

(அ) Electric mail (ஆ) Text mail

(இ) Electronic mail (ஈ) Soft mail

10. 'Whatsapp' தமிழாக்கம் (CO5, K5)

(அ) புலனம் (ஆ) முக நூல்

(இ) மின்னணு அஞ்சல் (ஈ) பல்நோக்கு ஊடகம்

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) ஊடக வகைகளை எடுத்துரைக்க. (CO1, K4)

(அல்லது)

(ஆ) ஊடகக் கோட்பாடு குறித்து விளம்புக. (CO1, K4)

12. (அ) 'இதழியல்' - நுவல்க. (CO2, K6)

(அல்லது)

(ஆ) இதழ்களின் சுதந்திரம் குறித்து இயம்புக. (CO2, K2)

13. (அ) அச்சுக் கோர்க்கும் முறைமைகளை எடுத்தியம்புக. (CO5, K6)

(அல்லது)

(ஆ) வானொலியின் வளர்ச்சியினைக் குறிப்பிடுக. (CO3, K5)

14. (அ) தொலைக்காட்சியின் வளர்ச்சிப் பாதையை மொழிக. (CO3, K2)

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சித் தொடர்கள் சமூகத்தில் ஏற்படுத்திய விளைவுகளைப் பகர்க. (CO3, K5)

15. (அ) 'தலையங்கம்' - குறித்து எழுதுக. (CO5, K4)

(அல்லது)

(ஆ) தகவல் மேலாண்மையில் கணினியின் பங்களிப்பினை நவில்க. (CO4, K4)

## பகுதி இ (5 × 8 = 40)

**அனைத்து** வினாக்களுக்கும் 1000 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) 'ஊடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' - விரித்துரைக்க. (CO1, K5)

(அல்லது)

(ஆ) 'ஊடகக் கோட்பாடுகள்' - விளக்கியுரைக்க. (CO1, K5)

17. (அ) இதழியலின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க. (CO2, K6)

(அல்லது)

(ஆ) தற்காலத் தமிழ் இதழ்களின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் எடுத்துரைக்க. (CO2, K6)

18. (அ) 'இந்திய வானொலி வரலாறு' - தொகுத்துரைக்க. (CO3, K5)

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சித் தமிழ் குறித்துக் கட்டுரைக்க. (CO3, K6)

19. (அ) சமூக வலைதளங்கள் குறித்து கட்டுரை வரைக. (CO4, K5)

(அல்லது)

(ஆ) 'கணினியின் பயன்பாடுகள்' - விரித்துரைக்க. (CO4, K5)

20. (அ) வலைப்பூக்களின் பயன்களைத் தொகுத்துரைக்க. (CO5, K5)

(அல்லது)

(ஆ) செய்தி சேகரிப்பு முறைகளைக் கட்டுரைக்க. (CO5, K1)

———————